# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்: 967/2016

ஆணை எண்: 157/2016

நாள்: 4/10/2016

திரு. ஆர். ஜானகிராமன்,
56, காட்டரம்பாக்கம்.
ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம்.
காஞ்சிபுரம் மாவட்டம்.

மனுதாரர்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்,
காஞ்சிபுரம்.

எதிர் மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், 56, காட்டரம்பாக்கம் ஊராட்சியைச் சேர்ந்த திரு, ஆர்.ஜானகிராமன் தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்த முறையீட்டு மனு16,09,2016 அன்று பெறப்பட்டு 967/16 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், 56 காட்டரம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த திரு. ஆர் ஜானகிராமன் அவர்கள் தனது முறையீட்டு மனுவில் கடந்த 10 ஆண்டுகளாக தனித்தொகுதியாக கீழ்கண்ட ஸ்ரீபெருமந்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்கள் உள்ளடங்கிய 56, காட்டரம்பாக்கம் கிராமம், சுமத்திரமேடு. புதுப்பேடு ஆகிய கிராமங்கள், ஊராட்சியில் செயல்பட்டு கிராம மக்களின் வாழ்வாதாரம் மிக மிக மோசமான நிலையில் பின்நோக்கி தள்ளப்பட்டு விட்டன. குறிப்பாக கிராமத்தில் சுகாதாரமற்ற குடிநீர், சாலை வசதி, கல்வி வசதி, படித்த இளஞர்களின் வேலை வாய்ப்பு வசதி சுகிதாரமற்ற சிப்காட் கம்பெனிகளின் குப்பைகழிவுகளை ஏரிகள் மற்றும் மக்கள் குடிதண்ணீர் பயன்பாட்டில் உள்ள குட்டை ஊரணி நீர் நிலைகளில் கொட்டுவதை தடுத்து, மக்களின் சுகாதாரத்தை பதுகாக்கவில்லையெனத் தெரிவித்து, அரசு ஆணைப்படி இன சுழற்சி முறையில் மேற்படி கிராமத்தை பொதுக் தொகுதியாக அறிவிப்பு செய்ய வேண்டும் ,என்று கிராம மக்களின் சார்பாக கேட்டுக் கெண்டுள்ளார்.

2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு–2 உட்பிரிவு (7) ன் படி. “உள்ளாட்சி அமைப்பு” என்பதற்கான பொருளில், “ஊராட்சி மன்றம்” மற்றும் “ஊராட்சி ஒன்றியம்” ஆகிய அமைப்புகள் இதன் வரையறைக்குள் வரவில்ல என்பதால் , இம்முறையீட்டு மனுமீது இம்முறை மன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது என்பதனை மனுதாரருக்கு தெரிவிக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது

ஓம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

திரு. ஆர். ஜானகிராமன்,
56, காட்டரம்பாக்கம்.
ஸ்ரீபெரும்ந்தூர் ஒன்றியம்.
காஞ்சிபுரம் மாவட்டம்.
பின்கோடு– 602117